விழுப்புரம் நகராட்சி

2019–ம் ஆண்டு **டிசம்பர் மாதம் 31–ம் தேதி செவ்வாய்கிழமை காலை 10.35 மணிக்கு** விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நகர்மன்ற "**சாதாரண கூட்ட**" நடவடிக்கைகள்.

முன்னிலை :– **ந.தட்சணாமூர்த்தி, பி.காம்.,**
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்

மன்றப்பொருள்

1. விழுப்புரம் நகராட்சியின் நூற்றாண்டு விழா கொண்டாடும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு 26.11.2019 அன்று சிறப்பு திட்ட நிதி ரூ.50.00 கோடிக்கு பணிகள் மேற்கொள்ள அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றதை செய்தி நிறுவனங்களில் விளம்பரம் செய்தமைக்கு கீழ்க்கண்டவாறு கேட்புகள் வரப்பெற்றுள்ளதால் தொகை ரூ.1,79,023/– வழங்கவும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1.	மாலை முரசு	–	ரூ.24,000–
2.	தினந்தந்தி	–	ரூ.57,173–
3.	மக்கள் குரல்	–	ரூ.25,200–
4.	தினகரன்	–	ரூ.38,000–
5.	தினமலர்	–	ரூ.34,650–
	மொத்தம்	–	**ரூ.1,79,023–**

அலுவலக குறிப்பு:–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(5144/2019/இ1)

2. இந்நகராட்சியின் 100–வது ஆண்டு விழா 2019–னை கொண்டாடும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 26.11.2019 அன்று விழுப்புரம் நகராட்சியின் அத்தியாவசிய பணிகள் மேம்பாடு செய்ய ரூ.50.00 கோடிக்கு அடிக்கல் நாட்டு விழா செய்யவிருப்பதற்கு வருகை தரும் பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவியர்கள் பயன்படுத்தும் விதமாக 10 இடங்களில் நகரும் கழிவறைகள் 10 வாடகை அடிப்படையில் அமைக்க வேண்டிய அவசியத்தால், தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதில் 21.11.2019 அன்று கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1.	M/s. Micropure Technologies (India) P.Ltd., Coimbatore - 02	-	Rs. 1,25,000-
2.	M/s. Sanitz Technologies, Coimbatore.	-	Rs.1,18,000 + 18% GST
3.	M/s. Leithris Flush 2019-20, Coimbatore.	-	Rs.1,18,000-

அலுவலக குறிப்பு:–

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் **M/s Leithris Flush 2019-20, Coimbatore** நிறுவனம் குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. தமிழக முதல்வரின் வருகையை முன்னிட்டு பொதுமக்களின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு தனி அலுவலரின் முன் அனுமதியுடன் வேலை ஆணை வழங்கி நடவடிக்கை எடுத்ததை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(9978/2019/இ1)

3. இந்நகராட்சிக்கு சொந்தமான கட்டுப்பாட்டில் இருந்து வரும் அம்மா உணவகத்தின் கதவு (Shulter), மாவு அறைக்கும் இயந்திரம் (Grinder) மற்றும் தண்ணீர் குழாய்கள் பழுதடைந்துள்ளதை பராமரிப்பு செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.20,000/–க்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அம்மா உணவக அன்றாட செயல்பாட்டினை கருத்தில் கொண்டு பணியினை மேற்க்கொள்ள விலைப்புள்ளி கோரிய நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(8581/2019/இ1)

4. இந்நகராட்சி பகுதிகளில் பரவலாக பெய்து வரும் வடகிழக்கு பருவ மழை 2019–ன் தாக்கத்தால் வார்டு எண்.1 முதல் 42 வரையிலான சாலைகளில் பெருக்கெடுத்தோடும் வெள்ள நீரால் சேதமுரும் சாலைகளை தற்காலிக நடவடிக்கையாக கிராவல் மண் கொண்டு பராமரிப்பு பணி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வடகிழக்கு பருவ மழை 2019–ன் சேதத்தினை கருத்தில் கொண்டு பொதுமக்களின் போக்குவரத்து நலன் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரிப் பெற்று பணி உத்தரவு வழங்கிய நடவடிக்கையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(8583/2019/இ1)

5. விழுப்புரம் நகராட்சியின் தலைமை நீரேற்று நிலையமான எல்லீஸ்சத்திரத்திலிருந்து விழுப்புரம் நகருக்கு குடிநீர் வரும் பிரதான குழாய் மற்றும் பகிர்மானக் குழாய்களில் உடைப்பு ஏற்படுவதால் குடிநீர் கசிந்து வீணாவதால் குடிநீர் விநியோகம் செய்வதில் தட்டுப்பாடு ஏற்படுகிறது. எனவே, மேற்கண்ட குழாய்களில் ஏற்படும் உடைப்புகளை சரிசெய்யும் பணிக்கு தோராய செலவினத் தொகை ரூ.9.90 இலட்சத்தினை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களது முன்அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(10100/2019/இ2)

6. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.30–ல் உள்ள ஊரல் குட்டை குளத்தில் உள்ள முட்புதர்கள், குப்பை கழிவுகள் மற்றும் கழிவு கசடுகளை அகற்றி அப்புறப்படுத்தியபின், குளத்தில் பருவமழை 2019–ன் மழைநீரை சேமிக்கவும், மேற்படி குளத்திற்கு பாதுகாப்புக்கு முள் இரும்பு கம்பி வேலி அமைத்து நகராட்சி சட்ட விதி 15–ன் கீழ் ரூ.4,73,011/–ஐ நகராட்சி வருவாய் நிதியில் மேற்க்கொண்டதை மன்றத்தின் பதிவுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மன்றம் பதிவு செய்யலாம்.

(7173/2019/இ1)

7. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.40–ல் கணேஷ் நகர் திருநகர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் மழைக்காலங்களில் மழைநீர் வெளியேறாமல் தேங்கி சுகாதார கேடு விளைவதால், தற்போதைய வடகிழக்கு பருவமழை 2019–ல் பெய்யும் மழைநீரை வெளியேற்றும் விதமாக, கிழக்கு பாண்டிரோடு அனிச்சம் பாளையம் வழியாக குச்சிப்பாளையம் வரை செல்லும் மழைநீர் வடிகாலை தூர்வாரி சுத்தம் செய்யும் பணி மேற்க்கொண்டு, நகராட்சி சட்டவிதி 15–ன் கீழ் ரூ.3,95,513/–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்க்கொண்டதை மன்றத்தின் பதிவுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மன்றம் பதிவு செய்யலாம்.

(7790/2019/இ1)

8. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.40 மற்றும் 41 தாமரைக்குளம் காலனி பகுதியிலிருந்து கணேஷ் நகர் வரை செல்லும் கோலியனூரான் மழைநீர் வாய்க்காலில் முட்புதர்கள் குப்பைகள் மற்றும் கசடு மண்சேர் ஆகியவற்றால் அடைபட்டு மழைநீர் செல்ல வழியில்லாமல் தேங்கி சுகாதார சீர்கேடு ஏற்படுவதை தவிர்க்கவும், நடைமுறையில் உள்ள ஏற்படுவதை தவிர்க்கவும், நடைமுறையில் உள்ள வடகிழக்கு பருவ மழையால் ஏற்படும் மழைநீரை தடையின்றி வெளியேற்ற வேண்டிய நிலையால், கால்வாயினை தூர்வாரி சுத்தம் செய்து நகராட்சி சட்டவிதி 15–ன் கீழ் ரூ.1,92,820/–ஐ நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்க்கொண்டதை மன்றத்தின் பதிவுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மன்றம் பதிவு செய்யலாம்.

(7789/2019/இ1)

9. இந்நகராட்சிப் பகுதியில் தினசரி சேகரமாகும் குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளாக பிரித்து நுண்உர செயலாக்க மையங்களுக்கு அனுப்ப மறுசுழற்சி மையம் (Resource Recovery Centre) அமைக்க தூய்மை இந்தியா திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 10–வது மாநில உயர்மட்டக் குழு பரிந்துரையில் ரூ.18.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அறிக்கை வரப்பெற்றுள்ளது. அதனை தொடர்ந்து வார்டு எண்.28 பென்னேரி அபிதா கார்டன் பகுதியில் நுண்உர செயலாக்க மையம் வளாகம் அருகில் அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மன்றம் அனுமதி வழங்கலாம்

(9424/2019/இ1)

10. விழுப்புரம் நகராட்சியில் 1 முதல் 42 வார்டுகளில் குடிநீர் விநியோக குழாய்கள் அடிக்கடி பழுதடைவதால், இதனை சரிசெய்யும் விதமாக புதியதாக CI Sluice Valve மற்றும் Air Valve சப்ளை செய்யும் பணிக்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மதிப்பீடு தொகை ரூ.7,45,**052**/– (ரூபாய் ஏழு இலட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து ஐம்பத்தி இரண்டு மட்டும்) குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மேற்கண்ட பணிக்கு **03.10.2019** தேதியில் தனி அலுவலர் முன் அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டதை பதிவு செய்யலாம்.

(8804/2019/இ2)

11. இந்நகராட்சிக்குட்பட்ட 42 வார்டுகளில் உள்ள குடிநீர் விநியோகக் குழாய் மற்றும் பகிர்மானக் குழாய்களை பழுது நீக்கம் செய்வதற்கு தேவையான உதிரி பாகங்கள், உபகரணங்கள் மற்றும் பணியாட்கள் சப்ளை செய்யும் பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் இப்பணியினை தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் **திரு.K.ராஜா,** ஒப்பந்ததாரர் மூலம் ரூ.3,73,295/– (ரூபாய் மூன்று இலட்சத்து எழுபத்தி மூன்றாயிரத்து இருநூற்று தொண்ணூற்றி ஐந்து மட்டும்) மதிப்பீட்டில் பணி மேற்கொண்டதையும், குடிநீர் (ம) வடிகால் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மன்றம் பதிவு செய்யலாம். (7964/2019/இ2)

12. இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்பெரும்பாக்கம் நகராட்சி மேல்நிலைப்பள்ளி வகுப்பறைக்கு Interactive Smart Class Room including software, Interactive Smart Class touch panel, **3200** Lumens short thro projector, Computer one set, Fall celing and LED lights, Art and Drawing in walls & Class Room with AC, Stablizer with wiring and other works போன்ற வசதிகளுடன் கூடிய Smart Class Room அமைக்கும் பணிக்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மதிப்பீடு தொகை ரூ.9,75,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) கல்வி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மேற்கண்ட பணிக்கு **25.10.2019** தேதியில் தனி அலுவலர் முன் அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டதை பதிவு செய்யலாம்.

(9582/2019/இ2)

13. இந்நகராட்சிக்கு சொந்தமான பூந்தோட்டம் நகராட்சி உயர்நிலைப்பள்ளி வகுப்பறைக்கு Interactive Smart Class Room including software, Interactive Smart Class touch panel, **3200** Lumens short thro projector, Computer one set, Fall celing and LED lights, Art and Drawing in walls & Class Room with AC, Stablizer with wiring and other works போன்ற வசதிகளுடன் கூடிய Smart Class Room அமைக்கும் பணிக்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மதிப்பீடு தொகை ரூ.9,75,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) கல்வி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மேற்கண்ட பணிக்கு **25.10.2019** தேதியில் தனி அலுவலர் முன் அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டதை பதிவு செய்யலாம்.

(9583/2019/இ2)

14. விழுப்புரம் நகராட்சியில் 1 முதல் 42 வார்டுகளில் உள்ள ஆழ்துளை குழாய் கிணறுகளில் பொருத்தியுள்ள 1HP, 3HP, 5HP, 7.50HP (ம) 10HP மோட்டார்கள் அடிக்கடி பழுது ஏற்படுவதால், உடனடி பழுது நீக்கம் செய்திட ஏதுவாக மேற்கண்ட மோட்டார்களை வாங்கி அலுவலக இருப்பில் (Stand by) வைக்கும் பணிக்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மதிப்பீடு தொகை ரூ.9,61,184/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து அறுபத்தோராயிரத்து நூற்று எண்பத்தி நான்கு மட்டும்) குடிநீர் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதையும் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மேற்கண்ட பணிக்கு **18.09.2019** தேதியில் தனி அலுவலர் முன் அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டதை பதிவு செய்யலாம்.

(8848/2019/இ2)

15. விழுப்புரம் நகராட்சியில் **33** வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டம் முடிக்கப்பட்டு தினசரி கழிவுநீரை காகுப்பம் மற்றும் எருமணந்தாங்கல் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்படுகிறது. இவ்வாறு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்ல **6** எண்ணிக்கையில் கழிவுநீர் உந்து நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. அவற்றில் 1).சந்தான கோபாலபுரம் – 16HP-2Nos 2).வடக்கு தெரு – 16HP-1No 3).பழைய பேருந்து நிலையம் – 16HP-1No ஆகிய மூன்று கழிவுநீர் உந்து நிலையங்களின் மின்மோட்டார்கள் நெகிழி குப்பைகள் மற்றும் கழிவுநீரின் அரிப்பு தன்மைக் காரணத்தினால் பழுதடைந்துள்ளதால் அம்மின்மோட்டார்களை காயில் கட்டி இதர பாகங்களை மாற்றி பழுது பார்க்கும் பணிக்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மதிப்பீடு தொகை ரூ.5,99,264/– (ரூபாய் ஐந்து இலட்சத்து தொண்ணூற்றி ஒன்பத்தாயிரத்து இருநூற்று அறுபத்தி நான்கு மட்டும்) குடிநீர் (ம) வடிகால் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மேற்கண்ட பணிக்கு **18.04.2019** தேதியில் தனி அலுவலர் அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டதை பதிவு செய்யலாம்.

(2285/2019/இ3)

16. விழுப்புரம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் **33** வார்டுகளில் செயல்படுத்தப்பட்டு கழிவுநீர் வெளியேற்றி சுத்திகரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு கழிவுநீர்உந்து நிலையங்களில் கழிவுநீரை கொண்டு செல்லும் பிரதான குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை அகற்றும் TN 32 AB 7418 எண் கொண்ட Jetting Cum Suction Unit வாகனத்தில் உள்ள Power Take off (PTO) unit பழுதடைந்துள்ளதால் புதியதாக PTO unit வாங்கும் பணிக்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மதிப்பீடு தொகை ரூ.3,47,136/– (ரூபாய் மூன்று இலட்சத்து நாற்பத்தி ஏழாயிரத்து நூற்று முப்பத்தி ஆறு மட்டும்) குடிநீர் (ம) வடிகால் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மேற்கண்ட பணிக்கு **03.12.2019** தேதியில் தனி அலுவலர் அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டதை பதிவு செய்யலாம்.

(9902/2018/இ3)

17. விழுப்புரம் நகராட்சியில் **1)**. வடக்கு தெரு – 16HP 2). பழைய பேருந்து நிலையம் – 16HP 3).ஏரிக்கரை – 10HP ஆகிய மூன்று கழிவுநீர் உந்து நிலையங்களின் மின்மோட்டார்கள் நெகிழி குப்பைகள் மற்றும் கழிவுநீரின் அரிப்பு தன்மைக் காரணத்தினால் பழுதடைந்துள்ளதால், அக்கழிவுநீர் மின்மோட்டாரை பராமரிப்பு மற்றும் பழுதுநீக்கம் (Repaire & Rewinding of Non clog sewage motor) செய்யும் பணிக்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மதிப்பீடு தொகை ரூ.4,85,492/– (ரூபாய் நான்கு இலட்சத்து எண்பத்தைந்தாயிரத்து நாநூற்று தொண்ணூற்றி இரண்டு மட்டும்) குடிநீர் (ம) வடிகால் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மேற்கண்ட பணிக்கு **25.07.2019** தேதியில் தனி அலுவலர் முன் அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டதை பதிவு செய்யலாம்.

(6057/2019/இ3)

18. விழுப்புரம் நகராட்சியில் **33** வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டம் முடிக்கப்பட்டு தினசரி கழிவுநீரை காகுப்பம் மற்றும் எருமணந்தாங்கல் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்படுகிறது. இவ்வாறு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்ல **6** எண்ணிக்கையில் கழிவுநீர் உந்து நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. அவற்றில் 1).ஏரிக்கரை கழிவுநீர் உந்து நிலையம் – 10 HP -2Nos 2). பொய்யப்பாக்கம் ரோடு – 10HP-1No 3).அகரம்பாட்டை – 7.5HP-1No ஆகிய மூன்று கழிவுநீர் உந்து நிலையங்களின் மின்மோட்டார்கள் நெகிழி குப்பைகள் மற்றும் கழிவுநீரின் அரிப்பு தன்மைக் காரணத்தினால் பழுதடைந்துள்ளதால் அம்மின்மோட்டார்களை காயில் கட்டி இதர பாகங்களை மாற்றி பழுது பார்க்கும் பணிக்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மதிப்பீடு தொகை ரூ.4,66,028/– (ரூபாய் நான்கு இலட்சத்து அறுபத்தி ஆறாயிரத்து இருபத்தி எட்டு மட்டும்) குடிநீர் (ம) வடிகால் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மேற்கண்ட பணிக்கு **18.04.2019** தேதியில் தனி அலுவலர் அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டதை பதிவு செய்யலாம்.

(2280/2019/இ3)

19. விழுப்புரம் நகராட்சியில் காகுப்பம் மற்றும் எருமணந்தாங்கல் சுத்திகரிப்பு நிலையங்களில் உள்ள **16**HP Panel board–ல் மின்சாதன பொருட்கள் பழுதடைந்து உள்ளதால், **8** நிலையங்களில் புதியதாக Panel board பொருத்துதல் மற்றும் அதற்கு தேவையான உதிரி பாகங்களை சப்ளை செய்யும் பணிக்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மதிப்பீடு தொகை ரூ.6,73,872/– (ரூபாய் ஆறு இலட்சத்து எழுபத்தி மூன்றாயிரத்து எந்நூற்று எழுபத்தி இரண்டு மட்டும்) குடிநீர் (ம) வடிகால் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மேற்கண்ட பணிக்கு **04.07.2019** தேதியில் தனி அலுவலர் அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டதை பதிவு செய்யலாம்.

(6880/2019/இ3)

20. விழுப்புரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டம் பயன்பாட்டில் உள்ளது. அவ்வார்டுகளில் கழிவுநீர் கொண்டு செல்ல 6 Lifting Station மற்றும் Pumping Station செயல்பட்டு வருகிறது. இவற்றில் காகுப்பம் மற்றும் வடக்கு தெரு கழிவுநீர் உந்து நிலையத்தில் செயல்பட்டு வந்த 16HP Submersible Sewage Non-clog மோட்டார் தற்பொழுது துருப்பிடித்து பழுதடைந்துள்ளதால் புதியதாக 16HP Submersible Sewage Non-clog மோட்டார் வாங்கும் பணிக்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மதிப்பீடு தொகை ரூ.9,46,150/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து நாற்பத்தி ஆறாயிரத்து நூற்று ஐம்பது மட்டும்) குடிநீர் (ம) வடிகால் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மேற்கண்ட பணிக்கு **18.04.2019** தேதியில் தனி அலுவலர் அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டதை பதிவு செய்யலாம்.

(309/2019/இ3)

21. விழுப்புரம் நகராட்சியில் 2011–ம் ஆண்டு எல்லை விரிவாக்கத்தின் போது கூடுதலாக ஐந்து ஊராட்சிகள் 1).எருமணந்தாங்கல் (வார்டு எண்.38) 2).காகுப்பம் (வார்டு எண்.36) 3).பானாம்பட்டு (வார்டு எண்.41,42) 4).சாலாமேடு (வார்டு எண்.26,28,29) மற்றும் 5). வழுதரெட்டி (வார்டு எண்.01,27) ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்படவில்லை. மேலும் அப்பகுதி வீடுகளில் உள்ள கழிவுநீரினை கழிவுநீர் அகற்றும் வாகனம் மூலம் கொண்டு சென்று பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையமான எருமணந்தாங்கல் மற்றும் காகுப்பம் நிலையத்திற்கு அக்கழிவுகளை கொண்டு விடுவதற்கு பதிவு கட்டணம் ரூ.1500/–ம் கழிவுகளை அகற்றும் லாரி ஒரு முறை கழிவுகளை விடுவதற்கு கட்டணமாக ரூ.250/–ம் வசூலிக்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மன்றம் அனுமதிக்கலாம்.

(7117/2019/இ3)

22. விழுப்புரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 42 வார்டுகளில் 33 வார்டுகளுக்கு (2011–ல் புதிதாக இணைக்கப்பட்ட 5 ஊராட்சி பகுதிகள் தவிர்த்து) மட்டும் 26.06.2014 அன்று முதல் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்பட்டு, இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி நடைபெற்று வருகிறது. தற்பொழுது செயல்பாட்டில் உள்ள பகுதிகளில் கழிவுநீர் குழாய் சேதமடைந்துள்ளதால் கழிவுநீரானது குடிநீரில் கலந்து வருவதாகவும், சாலைகளில் தேங்கி சுகாதார கேடு ஏற்படுவதாகவும் பொதுமக்களிடம் இருந்து அதிக அளவில் புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. எனவே, இப்புகாரினை உடனடியாக சரிசெய்யும் விதமாக சேதமடைந்த கழிவுநீர் குழாய்களை அகற்றி புதியதாக கழிவுநீர் குழாய்களை பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதார நலனை முற்றிலும் கருத்தில் கொண்டு மேற்காணும் பணிக்கு தனி அலுவலரின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(10097/2019/இ3)

23. விழுப்புரம் நகராட்சியில் 1 முதல் 42 வரை உள்ள வார்டுகளில் அமைந்துள்ள தெருவிளக்குகளுக்கான பழுதடைந்த Switch Box மாற்றிடவும், அதிக மின்அழுத்தம் உள்ள இடங்களில் புதிய Box பொருத்திட தேவையான Switch Box with Fuse Carrier Unit சப்ளை செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட பணிக்கு 14.08.2019–ந் தேதி அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ. எ ண்	பணி விபரம்	தொகை	ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரரின் பெயர்	ஒப்பந்த தொகை	ஒப்பந்த சதவீத மதிப்பீட் டை விட
1	விழுப்புரம் நகராட்சியில் 1 முதல் 42 வரை உள்ள வார்டுகளில் அமைந்துள்ள தெருவிளக்குகளுக்கான பழுதடைந்த Switch Box மாற்றிடவும், அதிக மின்அழுத்தம் உள்ள இடங்களில் புதிய Box பொருத்திட தேவையான Switch Box with Fuse Carrier Unit சப்ளை செய்யும் பணி.	9,50,000	திருமதி.A.நஸீம்	693981.00	-16.79% குறைவு

அலுவலக குறிப்பு:–

1. மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (மதிப்பீட்டை விட -16.79% குறைவு) **திருமதி.A.நஸீம்** அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மேற்காணும் செலவினத்தை வருவாய் நிதிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

(6270/2019/இ2)

24. விழுப்புரம் நகராட்சியில் தெருவிளக்கு உதிரி பாகங்கள் சப்ளை செய்யும் பணிக்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மதிப்பீடு தொகை ரூ.7,40,779/– (ரூபாய் ஏழு இலட்சத்து நாற்பதாயிரத்து எழுநூற்றி எழுபத்தொன்பது மட்டும்) வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மேற்கண்ட பணிக்கு **14.08.2019** தேதியில் தனி அலுவலர் அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டதை பதிவு செய்யலாம்.

(7646/2019/இ2)

25. விழுப்புரம் நகராட்சியில் வார்டு எண். 1 முதல் 21 வரை பகுதிகளில் உள்ள அனைத்து மின்மோட்டார்கள் பழுதுபார்க்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட பணிக்கு 13.09.2019–ந் தேதி அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ. எண்	பணி விபரம்	தொகை	ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஒப்பந்ததாரரின் பெயர்	ஒப்பந்த தொகை	ஒப்பந்த சதவீத மதிப்பீட்டை விட
1	வார்டு எண். 1 முதல் 21 வரை பகுதிகளில் உள்ள அனைத்து மின்மோட்டார்கள் பழுதுபார்க்கும் பணி.	9,85,000	ஸ்ரீ அய்யனார் கன்ஸ்ட்ரக்ஷன்	863564.00	-0.27% குறைவு
			SSV டெவலப்பர்ஸ்	874997.00	1.05% அதிகம்

அலுவலக குறிப்பு:–

1. மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் (மதிப்பீட்டை விட -0.27% குறைவு) **ஸ்ரீ அய்யனார் கன்ஸ்ட்ரக்ஷன்** அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மேற்காணும் செலவினத்தை குடிநீர் நிதிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

(6267/2019/இ2)

26. Jal Shakti Abhiyan திட்டத்தின் கீழ் விழுப்புரம் நகராட்சியில் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள், அலுவலகங்கள், புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம் மற்றும் இதர கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைக்கும் பணிக்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மதிப்பீடு தொகை ரூ.5,85,541/– (ரூபாய் ஐந்து இலட்சத்து எண்பத்தைந்தாயிரத்து ஐந்நூற்றி நாற்பத்தி ஒன்று மட்டும்) வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மேற்கண்ட பணிக்கு 07.08.2019 தேதியில் தனி அலுவலர் அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டதை பதிவு செய்யலாம்.

(6738/2019/இ2)

27. மாண்புமிகு சட்டம், நீதிமன்றம், சிறைச்சாலைகள் மற்றும் கனிம வளத்துறை அமைச்சர் அவர்களால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவின் சிறப்பு குறைதீர்க்கும் விதமாக இந்நகராட்சி பகுதியில் உள்ள பொதுமக்களிடம் மனுக்கள் பெறும் விழா 18.11.2019 அன்று நகராட்சி அலுவலகத்திலும் மற்றும் சண்முகாபுரம் பகுதியிலும் மனுக்கள் பெறுவதற்கு ஏதுவாக அமைச்சர், மாவட்ட ஆட்சியர், அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் அமருவதற்கு வகையில் ஏற்பாடு செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.60 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் 18.11.2019–ந் தேதிய வருகையினை முன்னிட்டு விழா ஏற்பாடு செய்ய அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(9321/2019/இ1)

28. இந்நகராட்சி துவங்கப்பட்டு 100 ஆண்டுகள் முடிந்த நிலையில் நூற்றாண்டு விழா கொண்டாடும் பொருட்டு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நகராட்சியின் அத்தியாவசிய மேம்பாட்டு பணிகளுக்கு ரூ.50.00 கோடி சிறப்பு திட்ட நிதியாக அறிவித்து 26.11.2019–ல் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதை தொடர்ந்து திட்டப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரிய அறிவிப்பு விளம்பரத்தினை மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு M/s Accord Advertising Agencies, Chennai – 39 என்ற நிறுவனம் விளம்பர கட்டணமாக ரூ.1,41,488/–க்கு கேட்பு வழங்கியுள்ளதால் தொகையினை வழங்கவும், செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(5144/2019/இ1)

29. விழுப்புரம் நகராட்சியில் 1 முதல் 42 வார்டுகள் உள்ளடங்கிய பகுதிகளில் மின்மோட்டர் பழுது, மின்தடை, குடிநீர் குழாய் உடைப்பு மற்றும் குடிநீருடன் கழிவுநீர் கலந்து வரும் பகுதிகளில் உள்ள பொதுமக்களின் அவசர குடிநீர் தேவையினை பூர்த்தி செய்யும் வகையில் குடிநீரினை தனியார் வாகனம் மூலம் சப்ளை செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.6.00 இலட்சத்தினை நகராட்சியின் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களது முன்அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

(9468/2019/இ2)

30. விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தின் கணினி அறைக்கு Air-conditioner with copper coil 5 star rated 1.5 TR split type AC unit-2 Nos, 5 KVA capacity automatic voltage stabilizer with time delay relay (V-Guard/Equivalent)- 2 Nos, Wiring for air-conditioner for proper voltage-2 Nos, Old air-conditioner removing charges-2 Nos சப்ளை செய்யும் பணிக்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மதிப்பீடு தொகை ரூ.1,13,330/– (ரூபாய் ஒரு இலட்சத்து பதிமூன்றாயிரத்து முந்நூற்று முப்பது மட்டும்) வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மேற்கண்ட பணிக்கு 03.10.2019 தேதியில் தனி அலுவலர் அனுமதி வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டதை பதிவு செய்யலாம்.

(8300/2019/இ2)

31. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் குப்பை அள்ளும் காம்பேக்டர் லாரி TN-32-AC 8003 க்கு இன்ஜின் ஆயில் சர்வீஸ் செய்ய இவ்வாகனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான விழுப்புரம் TVS Private Ltd என்ற நிறுவனத்திடமிருந்து பழுது நீக்கம் செய்திட உத்தேச விலைப்புள்ளி செலவினம் ரூ.19,200/– மட்டும் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட வாகனத்தை பழுது நீக்கம் செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மன்றம் அனுமதிக்கலாம்,பொது சுகாதார நலன் கருதி மேற்கண்ட வாகனத்தை பழுது நீக்கம் செய்யவும் விழுப்புரம் TVS Private Ltd நிறுவனத்திற்கு பணிஉத்தரவு வழங்கி மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

32. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வழுதரெட்டி கிராமம் சர்வே எண்.355/1,2–ல் சம்பந்தப்பட்ட மனையில் E.S கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டிடம் கட்ட அனுமதி பெறப்பட்போது உள் கட்டமைப்பு வசதி கட்டணம் ரூ.1,06,05,000/– தொகையில் 50% தொகையை திருப்பி வழங்ககோரி கட்டிட உரிமையாளர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண்.W.P.No.13286/2019–இல் 4–ம் பிரிதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு கடந்த 03.06.2019 அன்று எவ்வித நிபந்தனையும் இன்றி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கினை ஏற்று நடத்திய அரசு கூடுதல் வழக்கறிஞர் திருமதி.K.புவனேஸ்வரி அவர்கள் வழக்குறை கட்டணமாக ரூ.15000/– வழங்ககோரி கடிதம் அனுப்பியுள்ளார். கடிதம் பார்வைக்கு.

எனவே, மேற்படி வழக்கறிஞர் செலவினமாக இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ரூ.15000/– வழங்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மன்றம் அனுமதிக்கலாம்.

(7254/2019/எப்2)

33. விழுப்புரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 42 வார்டுகளில் 33 வார்டுகளுக்கு (2011–ல் புதியதாக இணைக்கப்பட்ட 5 ஊராட்சி பகுதிகள் தவிர்த்து) மட்டும் 26.06.2014 அன்று முதல் பாதாள சாக்கடை திட்டம் செயல்பாட்டில் உள்ளது. தற்பொழுது செயல்பாட்டில் உள்ள பகுதிகளில் சாலை சீரமைப்பு பணிகள் மற்றும் வாகன போக்குவரத்தால் பாதாள சாக்கடை ஆள் இறங்கும் தொட்டின் மூடி (Cover Slap & Ring) பழுதடைந்துள்ளது. இப்பழுதின் காரணமாக பொதுமக்களின் உயிர் பாதுகாப்பின்றி இருந்து வருகிறது. எனவே, பொதுமக்களின் உயிர் பாதுகாப்பு கருதியும், அவசர அவசியம் கருதியும் புதியதாக 166 எண்ணிக்கையில் பாதாள சாக்கடை ஆள் இறங்கும் தொட்டியின் மூடி (Cover Slap & Ring) சப்ளை செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுமக்களின் உயிர் பாதுகாப்பினை முற்றிலும் கருத்தில் கொண்டு மேற்காணும் பணிக்கு தனி அலுவலரின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(362/2019/இ3)

34. இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய மத்தியில் உள்ள பெண்கள் கட்டண கழிவறைக்கு 24.12.2019 அன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் பொது ஏலத்தில் எவரும் கலந்துகொள்ளவில்லை. கீழ்காணும் இரண்டு நபர்கள் மட்டும் ஒப்பந்த புள்ளியில் கலந்து கொண்டனர்.

வ. எண்	பெயர் மற்றும் விலாசம்	ஒப்பந்தப்புள்ளி தொகை ஆண்டிற்க்கு
1	திரு.K.விஜயகுமார் த/பெ கலியபெருமாள் எண்.70, G.R.P தெரு, விழுப்புரம்.	ரூ.5,50,000/–
2	திரு.S.ரமேஷ் த/பெ சேவான், எண்.58, அருந்ததியர் தெரு, விழுப்புரம்.	ரூ.3,50000/–

மேற்காணும் இரண்டு ஒப்பந்தாரர்களில் வரிசை எண்.1–ல் உள்ள நபர் உயர்ந்த பட்ட ஒப்பந்தபுள்ளி அளித்துள்ளார். மேற்கண்ட குத்தகை இனத்தினை 2018–2021–ஆம் ஆண்டிற்க்கு குத்தகை எடுத்த குத்தகைதாரர் 2018–2019–ஆம் ஆண்டு வரை (01.04.2018 முதல் 31.03.2019) வரை மட்டும் குத்தகையை நடத்திவிட்டு 2019–2020–ஆம் ஆண்டிற்க்கு குத்தகையினை புதுப்பிக்காமல் தனக்கு நஷ்டம் ஏற்பட்டு விட்டதாக தெரிவித்து குத்தகையினை புதுப்பிக்கவில்லை.

இந்நிலையில் மேற்கண்ட இனத்திற்கு 01.04.2019 முதல் துறைமூலம் வசூல்பணி மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் வருவாய் 01.04.2019 முதல் 30.11.2019 வரை உள்ள காலத்திற்கு தொகை ரூ.4,09,160/– (ரூபாய் நான்கு இலட்சத்து ஒன்பதாயிரத்து நூற்று அறுபது மட்டும்) வசூலிக்கப்பட்டுள்ளது.

சராசரியாக நாள் 1–க்கு (4,09,160 % 244 =1677) ஆகும். அதனை கணக்கில் கொண்டால் ஆண்டின் வருவாய் தோராயமாக ரூ.6,12,105/– (ரூபாய் ஆறு இலட்சத்து பண்ணிரான்டாயிரத்து நூற்று ஐந்து) ஆகும். இதில் அங்கு பணிபுரியும் இரண்டு பணியாளர்களின் ஊதியம் ஆண்டிற்க்கு ரூ.6,00,000/– (ரூபாய் ஆறு இலட்சம்) டிக்கெட்புக் அச்சடிப்பு செலவினம் தோராயமாக ரூ.30,000/– (ரூபாய் முப்பதாயிரம்) மின்சார கட்டணம் தோராயமாக ரூ.50,000/– (ரூபாய் ஐப்பதாயிரம்) மற்றும் பராமரிப்பு செலவினம் ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம்) ஆக மொத்தம் ரூ.6,90,000/– (ரூபாய் ஆறு இலட்சத்து தொன்னூறு ஆயிரம் மட்டும்) செலவிடப்படுகிறது. இதில் வருவாயை விட செலவினமே அதிகமாக உள்ளது.

மேலும் மேற்கண்ட இனத்திற்கு கடந்த 14 முறை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியும் தினசரி நாளிதழ்களில் விளப்பரம் செய்தும் எவரும் கலந்து கொள்ள முன்வரவில்லை. ஏனவே தற்போது K.விஜயகுமார் என்பவர் அளித்துள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.5,50,000/–எவ்வித செலவினமும் இல்லாமல் ஆகும். எனவே, உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று குத்தகையினை ஒப்படைப்பு செய்திட நகராட்சிக்கு நேரடி வருவாய் எவ்வித செலவினமும் இல்லை என்பதனை ஏற்று மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு –

அ) K.விஜயகுமார் என்பவர் அளித்துள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி ரூ.5,50,000/–ஐ மன்றம் அனுமதிக்கலாம்.

(9391/2017/அ5)

35. இந்நகராட்சியில் 2018–2019–ம் ஆண்டிற்கான, நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் 46 வங்கி கணக்குகளுக்கான கணக்கு இணக்கம் செய்யப்பட்டுள்ள வங்கி கணக்குகளுடன் ஒத்திசைவு செய்து ஆண்டு கணக்குகள் புதிய Urban Tree மென்பொருள் முறையில் தனியார் கணினி நிறுவனம் மூலம் செய்திட ஆகும் தோராய செலவினம் ரூ.75,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

2018–2019–ம் ஆண்டிற்கான ஆண்டு கணக்குகள், உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு சமர்ப்பிக்க வேண்டியதன் அவசர அவசியம் கருதி உள்ளூர் நிறுவனங்களின் விலைப்புள்ளி கோரியதையும், மேற்காணும் பணிக்கு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ஆதவ் சொலியூஷன், விழுப்புரம் என்பவரது விலைப்புள்ளியினை ஏற்று தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(8243/2018/பி1)

36. விழுப்புரம் நகராட்சி புதிய பேருந்து நிலையம் அருகில் புதியதாக கட்டப்பட்டுள்ள அரசு சட்டக் கல்லூரியினை திறந்து வைக்கவும் விழுப்புரம் நகராட்சியின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தினையொட்டி திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 26.11.2019 அன்று விழுப்புரம் நகரத்திற்கு வருகை தர உள்ளதால், நகராட்சி பகுதிகளில் சாலைகளை தற்காலிக புனரமைப்பு செய்யவும், விழா கொண்டாடும் விதமாக பேருந்து நிலையங்கள், நகராட்சி கட்டிடங்கள், பிரதான சாலைகள் மற்றும் அடிக்கல் நாட்டும் விழா பகுதிகளில் மின் விளக்குகள் (ஜெனரேட்டர் வசதியுடன்) அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.30 இலட்சத்திற்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(9962/2019/இ1)

37. இந்நகராட்சியின் 100–வது ஆண்டு விழா கொண்டாடும் விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் 26.11.2019 அன்று நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டமைக்கு மாலை மலர் செய்தித்தாளில் வரவேற்பு மலர் வெளியிட்டமைக்கு விளம்பர கட்டணம் ரூ.42,620/– கோரி கேட்பு வரப்பெற்றுள்ளதை வழங்கவும், செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(5144/2019/இ1)

38. இந்நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரது டிசம்பர் 2019 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

பதிவு செய்யலாம். (/ /சி1)

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,
விழுப்புரம் நகராட்சி.